திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே மேலூர் கூட்டுறவு நூற்பாலையைப் போலவே, முசிறியார் கூட்டுறவு நூற்பாலையும் நஷ்டத்திலே இயங்கியதால் மூடப்பட்டு அங்கே பணிபுரிந்த சுமார் 200 தொழிலாளர்கள் பணிக்கொடை உள்ளிட்ட எத்தகைய சலுகைகளும் இதுவரை பெறவில்லை என்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமை மாறியிருக்கிறதா? தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறியார் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்த அனைவருக்கும், அவர்களுக்குச் சேரவேண்டிய பணப் பயன்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 179 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை அந்தப் பணியாளர்களுடைய குடும்பத்திற்கு கொடுத்து உதவி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

90—

கலங்கரை விளக்கம்

***8124—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ராம்குமார்.

திரு. எம். ராம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் ஏராளமான மீன்பிடிப் படகுகள் உள்ளன. இரவு நேரங்களில்கூட அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்ற காரணத்தால், கலங்கரை விளக்கம் அவசியம் அமைத்துத் தரவேண்டும். இந்தக் கலங்கரை விளக்கத்தை அமைத்துத் தருவதால் அரசுக்கு அதிகமான செலவாகாது. மீனவர்கள் நலன் கருதி, மல்லிப்பட்டினம் பகுதியில் கலங்கரை விளக்கம் அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்து, வருகிற நிதியாண்டில் அமைத்துத் தருவதற்கு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலங்கரை விளக்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை எனத் தமிழ்நாடு கடல்சார் வாரியம் தெரிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.சி. மணி.

திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருமுறை கட்டுமரங்கள், பாக்கியிருக்கிற படகுகள் இவையெல்லாம் காணாமல்போய், மறுபடியும் இலங்கையிலே அவை அகப்பட்டு திரும்பக் கண்டுபிடித்ததற்குக் காரணமே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.சி. மணி, இது மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலே கலங்கரை விளக்கம் அமைப்பது தொடர்பான கேள்வி, அதனாலே நீங்கள்...

திரு. கோ.சி. மணி: அதற்குத்தான் வருகிறேன். அங்கே கலங்கரை விளக்கம் இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படுகின்றன என்று ஒருமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தத் துறையினர் எல்லாம் பார்வையிட்டு, அதை அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளைச் செய்கிறோம், ஆலோசிக்கிறோம் என்று தெரிவித்திருந்தார்கள். அதனுடைய நடவடிக்கை தொடருமா? அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள், இலங்கை அரசினால் சிறை பிடிக்கப்படுகின்ற நிலைமையை அறிந்து இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைக் காத்திட நிலையான குத்தகையே நிரந்தரத் தீர்வாகும் என்றும், இந்திய அரசு இலங்கை அரசைத் தொடர்புகொண்டு இலங்கை கடல் பகுதியிலே உரிமை பெற்ற இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இவர்களுடைய பாதுகாப்பு நிச்சயமாக தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 91, திரு. ப. அரசன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

91—

தொழிற்சாலை

***27929—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் நீண்ட கடற்கரைப் பகுதிகள் உள்ளதால் ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சார்ந்த தொழிற்சாலை ஒன்று உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் ஏதும் தற்போது துறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் வருடத்தில் 12 மாதங்கள் மீன் பிடிக்கச் செல்லமுடியாது. அதற்காகத்தான் அரசுகூட 4, 5 மாதங்களுக்கு நிவாரணம்கூட கொடுக்கிறது. மீனவர்கள் மீன் பிடித்து வருகிறபோது, வலையிலே சங்காயம் என்கிற ஒரு பொருள் அந்த வலையோடு சேர்ந்து